சில நேரங்களில் அதற்கு ஒப்புதல் தருவதில்லை. அவ்வாறு அவர்கள் ஒப்புதல் தந்துவிட்டால், அந்த வளாகம் முழுவதையும் இடித்துவிட்டு, புதிதாகக் கட்டி, தேவையான அளவிற்கு அரசு அலுவலர்களுக்கான வாடகை வீடுகளை வைத்துக்கொண்டு, மற்றவற்றை விற்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி, மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

13—

இன்றியமையாப் பொருட்கள்

***52684—திரு. கே.பி. முனுசாமி:**

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேப்பனஹள்ளி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், கொப்பகரை ஊராட்சி, கணவாயூர் கிராம நியாய விலைக் கடைக்கு இன்றியமையாப் பொருட்களை ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேன்கனிக்கோட்டை வட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், கொப்பகரை ஊராட்சிக்குட்பட்ட கணவாயூர் கிராமத்தில் உள்ள 116 குடும்ப அட்டைகளைக் கொண்ட பகுதி நேர நியாய விலைக் கடையில் பிரதி வாரம் புதன்கிழமை அத்தியாவசியப் பொருட்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. சூலிகுண்டாவில் உள்ள கடையிலிருந்து அத்தியாவசியப் பொருட்கள் கணவாயூர் கிராம நியாய விலைக் கடைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பொங்கல் திருநாளை முன்னிட்டு 10–1–2023 அன்று இந்த நியாய விலைக் கடையைச் சேர்ந்த அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல்

2023 ஜனவரி 12]

பரிசு வழங்கப்பட்டுள்ளன என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதாரத்தையும், எடையையும் உறுதிப்படுத்துகின்ற வகையில், நியாய விலைக் கடைகளில் வழங்கப்படுகின்ற சர்க்கரை, கோதுமை, பருப்பு மற்றும் எண்ணெய் பொருட்களை பாக்கெட்டுகளில் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கை மற்றும் வாக்குறுதியில் சொன்னதுபோலவும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கோரிக்கையினை நிறைவேற்றும்வண்ணமாகவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று வருகின்ற காலங்களில் அனைத்து நியாய விலைக் கடைகளிலும் அரிசி, சர்க்கரை போன்ற பொருட்களை பாக்கெட்டுகளில் வழங்குவதற்கு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மற்றுமொரு கோரிக்கை. தேர்தலின்போது கொடுத்த வாக்குறுதியின்படி, மின் சேமிப்பு செய்கின்ற வகையில், ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் 3* LED Bulbs *மானிய விலையில் வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு கோரிக்கை. கிராமப்புறங்களில், கைரேகை பதியவில்லையென்ற காரணத்தினால், அதிக அளவிலான குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்கள் கிடைக்காத நிலை உள்ளது.*

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கேள்வியைக் கேட்கவில்லை. அவர்கள் வேறு கேள்வியைக் கேட்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கைக்குப் பதில் சொல்லும்போது, இதற்கும் சேர்த்து பதில் சொல்லுங்கள். கிராமப்புறங்களில், கைரேகை பதிய இயலாதவர்களுக்கு அவர்களிடம் எழுத்துமூலம் கடிதம் பெற்றுக்கொண்டு, பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கச் சொல்ல வேண்டும்.*

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி எங்கள் துறைக்கு சம்பந்தம் இல்லாத கேள்வியாக உள்ளது. இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளில், இன்றைக்கு 80 சதவிகித வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கிறார்கள். நேற்றைக்கு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கூறியதுபோல், ஐந்தாண்டு கால எங்கள் ஆட்சியில் 20 மாதங்கள்தான் நிறைவடைந்திருக்கின்றன. மீதம் இருக்கின்ற 40 மாத காலத்தில் கண்டிப்பாக தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகள் அனைத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்கள் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்* Bio-Metric *முறை நிறைய இடங்களில் சரியாக இயங்குவதில்லை என்று கூறினார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இயந்திரம் வேலை செய்கிறது. இயந்திரங்களில் கைரேகை பதிவதில்லை.*

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி ஏற்கெனவே கோரிக்கை*

2023 ஜனவரி 12]

வந்துள்ளது. வயல்வெளிகளில் பணிபுரிபவர்களுக்கு கைரேகை அழிந்துவிடுகிறது. மாற்றுத் திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்தோர் ஆகியோருக்கு கைரேகை பதியாததன் காரணமாக பொருட்களைப் பெற முடியாத சூழ்நிலை உள்ளது. ஏற்கெனவே, நான் பலமுறை கூறியிருக்கிறேன், நியாய விலைக் கடைகளில் இதற்கான விண்ணப்பங்கள் இருக்கின்றன. அவர்களால் பொருட்களைப் பெற முடியவில்லையென்றால், அதைப் பூர்த்தி செய்து கொடுத்தால், விண்ணப்பத்தில் உள்ள வேறு ஒருவருக்கு பொருட்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 10–15

மேலும், கண் கருவிழி அடையாளம் மூலமாக பொருட்களை வழங்குவதற்கு ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி தந்து, pilot scheme *ஆக சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியிலும், கிராமப் பகுதியிலே பெரம்பலூர் பகுதியிலும்* rural *பகுதியிலே ஒன்றும்,* urban *பகுதியிலே ஒன்றும் என 2 இடங்களில் கண் கருவிழி அடையாளம் மூலமாக பொருட்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எப்படி* bio–metric *மூலமாகப் பொருள்களைப் பெறுகிறோமோ, அதேபோல் கண் கருவிழி அடையாளம் மூலமாக அனைத்து நியாய விலைக் கடைகளிலும் பொருட்களைப் பெறுகின்ற திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலுடன் அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)* Bio–metric *முறை வேலை செய்யவில்லையென்றாலும், அனைத்து நியாய விலைக் கடைகளிலும்* Iris *கண் கருவிழி அடையாளம் மூலமாக பொருட்களைப் பெறுவதற்கு விரைவிலே* tender *விடப்பட்டு, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விண்ணப்பம் இருக்கிறது என்றீர்கள். விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து தாலுகா விநியோக அதிகாரிகளிடம் போகச் சொல்லிவிடுகிறார்கள். ரேஷன் கடை ஊழியரே அதை வாங்கிக் கொண்டு, பொருட்களைக் கொடுத்தால் வசதியாக இருக்கும். புதிய திட்டம் வரும்வரை இந்த நடைமுறையை பின்பற்றச் சொல்லுங்கள்.*

[2023 ஜனவரி 12

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் கோரிக்கையைக் கண்டிப்பாக பரிசீலனை செய்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

14—

உப மின்கோட்டம்

***144—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் தொகுதி, பாபநாசம் மற்றும் அம்மாப்பேட்டை மின் பகிர்மானங்களை இணைத்து பாபநாசம் உப மின்கோட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் உப மின்கோட்டத்தில் 7 பிரிவு அலுவலகங்கள் உள்ளன. அதில் 85,405 மின்னிணைப்புகளும், அம்மாப்பேட்டை உப மின்கோட்டத்தில் உள்ள 2 பிரிவு அலுவலகங்களில் 21,019 மின்னிணைப்புகளும் உள்ளன. எனவே, பாபநாசம், அம்மாப்பேட்டை ஆகிய இரண்டு உப மின்கோட்டங்களை உள்ளடக்கி, பாபநாசம் புதிய மின் கோட்டம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.